# அஞ்சுகத் தாயின் அன்பு ஆணை... செல்வத்துக்காகவே பிறந்த செல்வி... நெகிழ வைக்கும் கோபாலபுரக் காவியம்!

அக்டோபர் 10 ஆம் தேதி காலை பெங்களூருவில் காலமான முரசொலி செல்வத்தின் உடல் அன்று மாலையே சென்னை கோபாலபுரத்தில் இருக்கும் கலைஞரின் வீட்டுக்கு எடுத்து வரப்பட்டது.

கோபாலபுரம் என்ற கூட்டில் கலைஞராலும்,, தயாளு அம்மையாராலும் வளர்க்கப்பட்ட பல்வேறு பறவைகளில் ஒருவர்தான் முரசொலி செல்வம். அவர் கால ஓட்டத்தில் பெங்களூருக்கும் சென்னைக்கும் பறந்துகொண்டிருந்தாலும்.... உயிர்க் காற்று போன பின் கோபாலபுரம் கூட்டுக்குள் வந்துதான் தனது கடைசி இரவைக் கழித்திருக்கிறார்.

அக்டோபர் 10 ஆம் தேதி மாலை கோபாலபுரம் இல்லத்துக்குள் உடலாக வந்தடைந்தார் முரசொலி செல்வம். நேசமும் பாசமும் அறிவும், உறவும், வரலாறும், அரசியலும், எதையும் தாங்கும் உறுதியும் கற்றுக் கொண்ட அந்த கோபாலபுர வீட்டில் 24 மணி நேரம் ஓய்வெடுத்துவிட்டு பெசன்ட் நகர் நோக்கி இறுதி ஊர்வலமாக புறப்பட்டார்.

இந்த 24 மணி நேரத்தில் தயாளு அம்மையார் முதலான பாச உறவுகள், எத்தனையோ துறை சார்ந்த பெரும்புள்ளிகள், தி.மு.க. தொண்டர் என பல்வேறு தரப்பைச் சேர்ந்தவர்களும் அவரை கடைசியாக சந்தித்து உரையாடிவிட்டுச் சென்றார்கள். வழக்கமாக அவர் புன்னகையோடு பதிலுரைப்பார். ஆனால் இந்த இறுதி உரையாடலில் அவர் பேசவே இல்லை.








அவரைப் பற்றியே அனைவரும் பேசிக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவருக்கும் அவ்வளவு சம்பவங்கள் முரசொலி செல்வத்தைப் பற்றி இருக்கின்றன,

தி.மு.க. பொதுச் செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன், குளிர்ப்பெட்டிக்குள் இருந்த முரசொலி செல்வத்தைப் பார்த்து கண்ணீரோடும் கோபத்தோடும், 'ஏன்யா? நீ மட்டும் போயிட்ட... என்ன உனக்கு அவசரம்?' என்று மாலையை செல்வத்தை நோக்கி விட்டெறிந்தார். அது கோபமல்ல... முரசொலி செல்வத்தின் மீது அவர் வைத்திருந்த மூர்க்கத்தனமான அன்பு!

'தலைவர் கலைஞரோடும் கோபாலபுரத்தோடும் என்னை பிரிக்க முடியாத அளவுக்கு ஃபெவிகால் போட்டு ஒட்டிவிட்டதே முரசொலி செல்வம்தான்.

கல்லூரி வாழ்க்கை தொடங்கி இன்று வரை யான் பெற்ற பேருக்கெல்லாம், செல்வமே முழு முதல் காரணகர்த்தா என்பதை என் நெஞ்சு அறியும், எங்களை நெருங்கியவர்கள் அறிவார்கள்" என்று கூறியிருக்கிறார் துரைமுருகன். இந்த மூர்க்கத்தனமான அன்புதான், செல்வத்தின் மீதான கோபமாக வெளிப்பட்டிருக்கிறது.


முரசொலி செல்வம் மீது கலைஞர் எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்பதையும், செல்வத்துக்கு தனது மகள் செல்வியை அவர் எப்படி திருமணம் செய்துகொடுத்தார் என்பதையும் கலைஞரே வெளியுலகத்துக்கு சொல்லும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியவர் ஜெயலலிதா.

ஆம்... 1991 இல் ஜெயலலிதா ஆட்சியில் தி.மு.க. வின் ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம் வழுதி. ஒன்றாக இருந்தாலும் நின்று சட்டமன்றத்தில் கர்ஜித்தவர்.

அப்படித்தான் 1991 செப்டம்பர் 9 ஆம் தேதி சட்டமன்றத்தில் ஆவேசமாக பேசினார் பரிதி இளம் வழுதி. அப்போதெல்லாம் முரசொலியின் வெளியூர் பதிப்பு மதியம் 2 மணிக்கு முடித்தாக வேண்டும். அப்போதுதான் வெளியூர்களுக்கு இதழை அனுப்பி மறுநாள் காலை கிடைக்கச் செய்ய முடியும். முரசொலி மட்டுமல்ல, பல நாளிதழ்களின் நிலையும் அதுதான்.

அதனால் முரசொலி ஆசிரியரான செல்வம், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம் வழுதியின் பேச்சை வெளியிட்டு முரசொலி முதல் பதிப்பை முடித்து அச்சுக்கு அனுப்பி அது வெளியூர்களுக்கும் போய்க் கொண்டிருந்தது.

இந்நிலையில், பரிதி பேசிய பேச்சின் ஒரு பகுதியை மாலை அவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறார். ஆனால், அவைக் குறிப்பில் இருந்து சபாநாயகரால் நீக்கப்பட்ட பரிதியின் பேச்சு மறுநாள் வெளியூர் முரசொலி பதிப்பில் வெளியானது.



இதற்காகத்தான் முரசொலி ஆசிரியர் செல்வம் மீது சட்டமன்றத்தில் உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வரப்பட்டது. செப்டம்பர் 25 ஆம் தேதி சட்டமன்றக் கூண்டில் ஏற்றப்பட்டார். அவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா முதல்வர் ஜெயலலிதா முன்னிலையில் முரசொலி மீதான கண்டனத்தைப் படித்தார். என்ன தண்டனை தருவார் என்று எதிர்பார்த்த வேளையில், 'நீங்கள் போகலாம்' என்று கூறிவிட்டார்.

**இதற்குப் பின் முரசொலியில், ' கூண்டு கண்டேன் குதூகலம் கொண்டேன்' என்று கலைஞர் கடிதம் எழுதுகிறார். அந்த கடிதத்தின் மூலம் தன் பிறவிப் பயனை அடைந்துவிட்டேன் என்று தனது முரசொலி நினைவலைகள் நூலில் குறிப்பிடுகிறார் முரசொலி செல்வம்.**

அந்த கடிதத்தில் கலைஞர் சொல்லும் செய்திகள் முரசொலி செல்வத்தின் தனிப்பட்ட வாழ்வையும், பொது வாழ்வையும் உச்சபட்சமாக கௌரவப்படுத்தும் செய்திகள்,

கலைஞர் சொல்லும் அந்த ஆச்சரிய தகவலை இப்போது காண்போம்...

**"இந்தியாவின் ஆலோசகராக இங்கிலாந்து அரசின் வேண்டுகோளின் பேரில் லண்டன் மாநகருக்கு செல்ல அனிபால் எனும் விமானம் ஏறி... நீதிக் கட்சியின் தன்னேரில்லாத தளபதி சர். ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள் பயணம் செய்தபோது அவர் அமர்ந்திருந்த அந்த விமானம் ஓமான் கடலில் வீழ்ந்தது. தமிழர்களின் செல்வத்தை திராவிடர்களின் செல்வத்தை நம்மிடமிருந்து பிரித்துத் தொலைத்தது.**

**1940 இல் பன்னீர்செல்வம் மறைந்த சோக நிழல் இந்த மண்ணில் படிந்திருக்கும்போதுதான், அதே 1940 ஏப்ரல் திங்களில் என் சகோதரிக்கு ஒரு மகன் பிறந்தான். மறைந்தாலும் மனதில் நிறைந்திருக்கும் பன்னீர்செல்வத்தின் நினைவாக அவனுக்கு நான் பன்னீர்செல்வம் என்று பெயரிட்டேன்.**

**அந்த பன்னீர்செல்வம் தான் சட்டப் பேரவைக் கூண்டிலே நிறுத்தப்பட்ட முரசொலி ஆசிரியர் செல்வம்.**

**செல்வம் பிறந்தபோதே என் தாயார் என்னைப் பார்த்து, 'உனக்கு ஒரு பெண் பிறந்தால், அதற்கு செல்வி என பெயரிட்டு செல்வத்துக்கே துணைவியாக்க வேண்டும்' என்று அன்புக் கட்டளைப் பிறப்பித்தார்கள். பாட்டியின் ஆசை நிறைவேறியது.**

**அண்ணா தலைமையில் தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, காயிதே மில்லத் ஆகியோர் ஒரே மேடையில் தோன்றி மணமக்களை வாழ்த்தினர். அந்த மணக்கோலத்தில் செல்வத்தைப் பார்த்தபோது கூட எனக்கு அத்தனை மகிழ்ச்சி இல்லை.**



**ஆனால், ஆங்கிலம் தமிழ் நாளேடுகள் அத்தனையிலும் செல்வம் சட்டப்பேரவை கூண்டில் சிரிப்பு தவழ நின்றுகொண்டிருக்கும் படம் வெளிவந்துள்ளதைப் பார்த்தபோதுதான் எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை" என்று முரசொலி கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் கலைஞர்.**

இன்று முரசொலி செல்வத்தின் உடல் மீது இருந்த கண்ணாடிப் பேழை அகற்றப்பட்டபோது... கலைஞரின் மகள் செல்வி தன் கணவர் முரசொலி செல்வத்தின் மார்பு மீது கடைசியாய் ஒரு முறை தலை சாய்த்து வெடித்து அழும் காட்சி அனைவரையும் உலுக்கியது.

கலைஞரின் தாயார் அஞ்சுகத்தம்மையாரின் அன்பு உத்தரவின் பேரில் செல்வி பிறப்பதற்கு முன்பே.... அவருக்கு செல்வி என பெயரும், செல்வத்தின் மனைவி என்ற உரிமையும் நிலைநாட்டப்பட்டதை என்னவென்று சொல்வது?

காவியக் காதலையெல்லாம் தோற்கடித்த இந்த செல்வி செல்வம் திருமண பந்தம் தனிப்பட்ட வாழ்வு மட்டுமல்ல... தி.மு.க. வின் வளர்ச்சியோடும், முரசொலியின் வளர்ச்சியோடும் பின்னிப் பிணைந்த பொது வாழ்வும் கூட!

புறப்பட்டார் முரசொலி செல்வம்... **நாளைய முரசொலிக்கான கட்டுரையாக தன்னையே வழங்கி விட்டு!**

**-ஆரா**

**நன்றி :**

**"மின்னம்பலம்" இணையதளம்**

# ஏழை, எளிய மக்களின் கல்விக் கனவை நிறைவேற்றி வருகிறார் முதல்வர் !

## திருமயத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

*புதுக்கோட்டை அக் 13-*

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பி. அழகாபுரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கோனாபட்டு சரஸ்வதி மேல்நிலைப்பள்ளி, குழிபிறை மற்றும் நச்சாந்துபட்டி ராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளிகளில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கோட்டாட்சியர் ஐஸ்வர்யா தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி அரசுப் பள்ளிகள், அரசு உதவி



பெரும் பள்ளிகள் என்றாலே ஒரு காலத்தில் குறைவாக மதிப்பிடப்பட்டன. அதேசமயம் தனியார் பள்ளிகள் என்றால் அதற்கென தனி மதிப்பு மரியாதை மக்களிடத்தில் இருந்தன. ஆனால் தற்போது தனியார் பள்ளிகளுக்கு இணையாக அல்லது அதைவிட ஒரு படி மேலே அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கின்ற அரசு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு. ஒரு தனியார் பள்ளியில் சேர வேண்டும் என்றால் அட்மிஷன் பீஸ், புக் பீஸ், சீருடை உள்ளிட்ட அனைத்திற்கும் பணம் செலுத்த வேண்டியிருக்கும். இதனால் உங்கள் பெற்றோர்களுக்கு நிதி சுமை ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆனால் அரசு பள்ளிகளில் அனைத்து வசதிகளையும் ஒரு பைசா செலவின்றி செய்து கொடுக்கின்றது தமிழ்நாடு அரசு. ஏனென்றால் தனியார் பள்ளி, அரசு பள்ளி மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதற்காக அரசு கொண்டு வந்த திட்டம். அதேபோல் தனியார் பள்ளி மாணவர்கள் கட்டணம் செலுத்தி பஸ்களில் பயணம் செய்கின்றனர். ஆனால் அரசு பள்ளி மாணவர்கள் இலவசமாக பஸ்களில் பயணம் செய்து பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் மாணவ, மாணவிகள் பள்ளிக்கு தாமதமின்றி வருவதற்காகவும் சோர்வின்றி படிப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு விலையில்லா சைக்கிள்கள் வழங்கி வருகிறது. இந்த ஆண்டு முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து வருகின்ற மாணவ மாணவிகளுக்கு மேல் படிப்புக்கு மாதம் ரூ.1000 வழங்குகிற திட்டம் மாணவர்களுக்கு தவப்புதல்வன், மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. மாணவர்களை உற்சாகப்படுத்த வேண்டும், கற்கும் திறனை அதிகப்படுத்த வேண்டும், அதில் அவர்கள் ஆர்வத்தோடு செயல்பட வேண்டும் என்ற உன்னத லட்சியத்தோடு இந்த பட்ஜெட்டில் மட்டும் பள்ளிக்கல்வித்துறைக்கு என ரூ. 45 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஏழை எளிய மக்களின் கல்வி கனவை நிறைவேற்றுகிற அரசாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையினான அரசு செயல்படுகிறது. எனவே மாணவர்கள் அரசுக்கு திருப்பி செய்கின்ற நன்றி கடனாக நன்கு படித்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் இருந்து படித்து வரும் நாங்கள் தான் முதன்மையானவர்கள் என நிரூபிப்பது தான் அரசுக்கு கைமாறு என தெரிவித்தார். கடந்த ஆண்டு குழிபிறை ராமநாதன் மேல்நிலைப் பள்ளியில் 183 பேர் பிளஸ் டூ தேர்வு எழுதி ஒரு மாணவர் மட்டுமே தோல்வி அடைந்துள்ளார். அதேபோல் எஸ்.எஸ்.எல்.சி.தேர்வில் 161 பேரில் நான்கு பேர் மட்டுமே தோல்வி அடைந்துள்ளனர். எனவே எதிர்வருகின்ற பொதுத்தேர்வில் அனைத்து மாணவர்களும் நன்கு படித்து 100% வெற்றி பெற வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

### கீ.வ.குப்பம் மேற்கு ஒன்றியம் சார்பில்

# முரசொலி செல்வம் திருவுருவப்படத்திற்கு மரியாதை!

## கே.சீதாராமன் தலைமையில் மலர்தூவி அஞ்சலி

*வேலூர், அக்.13-*

*11.10.2024* அன்று முற்பகல், வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் மேற்கு ஒன்றியத்தின் சார்பில், மறைந்த அய்யா. முரசொலி செல்வம் அவர்களின் மறைவை ஒட்டி, அவரின் திருவுருப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி, அஞ்சலியுடன் வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கீ. வ.குப்பம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே. சீதாராமன் தலைமை தாங்கிட, பொதுக்குழு உறுப்பினர் கே.தயாளமூர்த்தி,

கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாநில துணை செயலாளர் சி.கோபி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சா.பரிமளம், மாவட்டப் பிரதிநிதிகள், சி.மார்கபந்து, வெங்கடேசன், வி.எத்திராசன், ரகு, மற்றும் கழக முன்னனியினர் பலர் கலந்து கொண்டு, மலர் தூவி, அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வினை ஒன்றிய கழகத்துடன் ஒருங்கிணைந்து, முரசொலி தமிழ் மன்றம் முன்னின்று ஏற்பாடு செய்தது.



மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன் கழக நிர்வாகிகளுடன் சேர்ந்து அஞ்சலி செலுத்தினார்.